பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

'மீரா'வின் நாவல்கள்
செங்கை ஆழியானின்
''மழைக்காலம்'' 20/-
கே. எஸ் ஆனந்தனின்
''ராதையின் நெஞ்சம்''
30/-
து வைத்திலிங்கத்தின்
''பூம்பனிமலர்கள்'' 25/-
இனுவை சிவம்பர
திருச்செந்திநாதனின்
''முடிவல்ல ஆரம்பம்''
25/-
விற்பனையாளர்:
பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ 2/-

'மீரா'வின் புதிய நாவல்
இலவசம்!
'மீரா' வெளியிட்ட
முதல் நான்கு நாவல்களை
வாங்கி, இணைக்கப்பட்டுள்ள
கூப்பனை அனுப்பி
கே. எஸ் ஆனந்தனின்
பூஜைக்கு வாரும் பூவை'
என்னும் நாவலை
இலவசமாகப் பெற்றுக்
கொள்ளுங்கள்.
பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு ஐப்பசி மீ 10 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 ற அவ்வல் பிறை 14 (26 – 10 – 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 219

# ரூ. 2,000 நிவாரணம்; சகலருக்கும் உடனே கிடையாது

## மொத்தத்தேவை: 40 கோடி ரூபா ஆனால் ஒதுக்கப்பட்டது: $7\frac{1}{2}$ கோடி ரூபா

— அலுவலகச் செய்தியாளர்: ஜோய் பூரணச்சந்திரன் —

யாழ்ப்பாணம், அக்டோபர் 26

கடந்தவருட இறுதியில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள முதற்கட்ட நிவாரணமான இரண்டாயிரம் ரூபா, யாழ். மாவட்டத்தில் தகுதியுடையவர்கள் எல்லோருக்கும் உடனடியாக, ஒரேநேரத்தில் கிடைக்கமாட்டாது என அறிய வருகிறது.

இந்த நிவாரணத் தொகையைப் பெறத்தகுதியான சகலருக்கும் வழங்குவதாயின் 40 கோடி ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அரசாங்கம் தற்பொழுது யாழ் மாவட்டத்திற்கென ஏழரைக்கோடி ரூபாவையே ஒதுக்கியுள்ளது.

எனினும் நிவாரணம் பெறத் தகுதியுடைய அனைவருக்கும் கட்டம் கட்டமாக அதனை வழங்க ஏற்பாடு செய்யப்படும் என உறுதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அறியவந்திருக்கிறது.

புனர்வாழ்வு புனர் நிர்மாண அமைச்சின் 'ஒருங்கிணைக்கப்பட்ட நிவாரணத்திட்டத்தின்' கீழ் இராணுவ நடவடிக்கைகளினால மரணமடைந்தவர்கள் அங்கவீனமடைந்தவர்கள், வீடுகளை, உடைமைகளை இழந்தவர்கள், தொழில் முயற்சி பாதிக்கப்பட்டவர்கள், இடம்பெயர்ந்தவர்கள் ஆகியோர் நிவாரணம்பெறுவதற்கு வகை செய்யப்பட்டிருந்தது

இதன்படி யாழ்ப்பாண மாவட்டத்தில் நிவாரணம் பெறுவதற்காக இதுவரை ஒரு லட்சத்து 40 ஆயிரம் குடும்பங்கள் விண்ணப்பித்திருக்கின்றன இம்மாதம் முடிவடைவதற்குள் கிடைக்கும் என உத்தேசிக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கும் சேர்த்து வழங்குவதற்கு மொத்தம் 40 கோடி ரூபா தேவைப்படும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

ஆனால் அரசாங்கம் தற்போது ஒதுக்கியுள்ள $7\frac{1}{2}$ கோடி ரூபா வழங்கப்பட்ட பின்னரே அரசு தனது அடுத்தகட்ட நிதியை ஒதுக்கீடு செய்யப்போவதாக அறிவித்துள்ளது.

எனவே ஒவ்வொரு அரசாங்க அதிபர் பிரிவிலும் விண்ணப்பித்தவர்களில் உடனடியாக நிவாரணம் வழங்கப்பட வேண்டியவர்களின் முன்னுரிமைப் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டு அவர்களுக்கே முதற்கட்டமாக இந்த நிவாரணம் வழங்கப் படவுள்ளது என்று உதயனுக்கு மிக நம்பிக்கையாக அறிய வந்துள்ளது (அ–5)

## ஆர்ப்பாட்டப் பேரணிகளை கலைக்க கண்ணீர்ப் புகை!

கொழும்பு, அக்டோபர் 26

தெற்கில் ஊரடங்குச் சட்டம் அமுல் நடத்தப்பட்ட பகுதிகள் தவிர ஏனைய இடங்கள் பலவற்றில் ஆர்ப்பாட்டங்கள் நேற்று பரவலாக இடம்பெற்றன என்று பி.பி.சி அறிவித்தது.

வடமத்திய மாகாணத்தில் மதவாச்சியிலும் மற்றும் வெலிமடையிலும் நடந்த ஆர்ப்பாட்டங்களைக் கலைக்க பாதுகாப்புப்படையினர் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் 5 ஆயிரம் பேர் கலந்துகொண்ட ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. (உ-எ)

## பெரும் அசம்பாவிதங்கள் கொழும்பில் நேற்று இல்லை

கொழும்பு. அக்டோபர். 26

கொழும்பு உட்பட ஊரடங்குச்சட்டம் அமுலில் இருந்த எல்லா இடங்களிலும் பெரிய அசம்பாவிதங்கள் ஏதும் இடம்பெறவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

நகரில் நடமாட்டமே காணப்படவில்லை

பாதுகாப்புப் படையினர் முக்கிய சந்திகளில் தடைகளைப் போட்டு காவலில் ஈடுபட்டிருந்தனர். உல்லாசப் பயணிகள் ஹோட்டல்களுக்குள் அடைபட்டுக் கிடந்தனர்.

இதனிடையில் பாதுகாப்பு அமைச்சு நியமித்த உயரதிகாரிகள் கொண்ட கண்காணிப்புக்குழு ஒன்று நாட்டின் ஏனைய பகுதிகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்கள் பற்றி பரிசீலனை செய்ததாக அறிவிக்கப்பட்டது. (உ-எ)

## ஊரடங்கு விவரங்கள்

கொழும்பு, அக்டோபர் 26

கொழும்பு, களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்று மாலை 6 மணியுடன் நீக்கப்பட்டது.

தென் மாகாணத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணி முதல் கொண்டு வரப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று காலை 4 மணிக்கு நீக்கப்படும் என்று

(6ம் பக்கம் பார்க்க)

## "உள்ளூர் ஊரடங்கு"

கொழும்பு, அக்டோபர். 26

ஊரடங்குச் சட்டம் அமுலில் இல்லாத பகுதிகளில் இயங்கும் அரச அலுவலகங்கள், தனியார் அலுவலகங்களைச்சுற்றி ''உள்ளூர் ஊரடங்கு'' உத்தரவு அமுல் நடத்தப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

அலுவலகங்களுக்குள் சென்று ஊழியர்களை ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ளத் தூண்டிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாத்தளையில் கொள்ளை!

கொழும்பு அக் 26

மாத்தளையில் உள்ள பீங்கான் தொழிற்சாலை ஒன்றில் இருந்து பன்னிரண்டு லட்சம் ரூபா பெறுமதியான பணம், நகைகள் கொள்ளையிடப்பட்டன என்று அறிவிக்கப்படுகிறது அங்கிருந்து ஐந்து துப்பாக்கிகளும் அபகரிக்கப்பட்டன.

காலை 10 மணியளவில் 5 பேர் ஆயுதங்களுடன் தொழிற்சாலைக்குள் புகுந்து அங்கிருந்தவர்களை பயமுறுத்தி கொள்ளையில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. (உ-எ)

## கொட்டாஞ்சேனை சம்பவம்; 8பேர் பலி! 70 பேர் காயம்!!

கொழும்பு, அக் 26

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கிரனேட் தாக்குதலில உயிரிழந்தோரின் எண்ணிக்கை எட்டாக அதிகரித்தது.

குறைந்தது 70 பேர் வரையில் காயமடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவர்களில் ஒருவர் மாநகரசபை உறுப்பினர் என்று சொல்லப்படுகிறது

கட்டடத்தின் மேல்மாடியில் ஐக்கியதேசியக் கட்சிக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது அப்போதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

நாடாளுமன்ற விவகார, விளையாட்டுத்துறை அமைச்சரான வின்சன்ட்பெரேரா இக்கூட்டத்தில் கலந்து கொள்ள இருந்தார். ஆனால் தாக்குதல் நடந்த சமயம் அவர் கூட்டத்தில் இல்லை.

இனந்தெரியாத இருவர் இயந்திரத்துப்பாக்கிகள் சகிதம் ஐ. தே. க. கூட்டம் ஒன்று நடந்து கொண்டு இருந்த அறைக்குள் சென்று இரண்டு கிரனேட்டுக்களை வீசினர்.

துப்பாக்கி நபர்களைக் கண்டதும் கூட்டத்தில் இருந்த சிலர் பயத்தில் மாடிக்கட்டட யன்னல் ஊடாக வெளியே பாய்ந்தனர். அதனாலும் சிலர் படுகாயமடைந்தனர்.

—இப்படி ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. (உ-எ)

## பொலிகண்டிப் பகுதியில் வேட்டுச் சத்தங்கள்

வடமராட்சி, அக் 26

கடந்த திங்கள் இரவு பொலிகண்டிப் பகுதியில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் அதையண்டிய கடற்பகுதியில் பீரங்கிக் குண்டுச் சத்தமும் கேட்டன. இதனால் அப்பகுதியில் பெரும் பதற்றமும் பீதியும் நிலவின

இரவு 8 30 மணி முதல் சுமார் ஒரு மணித்தியால நேரம் இச் சத்தங்கள் தொடர்ந்து கேட்டன.

இப்பகுதிக் கடலில் சில படகுகள் தென்பட்டதாகவும் அதையடுத்தே அப்பகுதியில் தாக்குதல்கள் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது

இந்தத் தாக்குதல் சம்பவங்களை அடுத்து கரையோரப்பகுதி மக்கள் பாதுகாப்புதேடிஊருக்குள் ஓடிச்சென்றனர். (உ-160)

## பருத்தித்துறையிலும்

வடமராட்சி, அக் 26

பருத்தித்துறை டிப்போவிற்கு முன்பாகவுள்ள பகுதிகளில் நேற்றுக்காலை 10 மணியளவில் நீண்டநேரம் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இதனால பருத்தித்துறைப் பகுதியில் நேற்றுக்காலை பெரும் பீதியும், பதற்றமும் நிலவியது.

அப்பகுதியில் ரோந்தில் ஈடுபட்டிருந்த படையினரைக் கண்டு சில வாலிபர்கள் ஓடியதாகவும், அதையடுத்தே வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது

அந்த வைத்து இரு வாலிபர்கள் படையினரால் கைது செய்யப்பட்டு டிரக்கில் ஏற்றிச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இந்தச் சம்பவங்கள் இடம்பெற்று சுமார் இரண்டு மணித்தியாலங்களின் பின பருத்தித்துறைப் பகுதி வழமைக்குத் திரும்பியது. (உ)

## தென்மராட்சியில் நாளை துக்கதினம், ஹர்த்தால்

### பிரசைகள் குழு அழைப்பு

யாழ்ப்பாணம், அக் 26

தென்மராட்சிப் பகுதி எங்கும் நாளை துக்கதினமும் ஹர்த்தாலும் அனுஷ்டிப்பது என தென்மராட்சிப் பிரசைகள் குழு தீர்மானித்துள்ளது.

கடந்த வருடம் அக்டோபர் 27ஆம் திகதி இராணுவ நடவடிக்கையின் போது சாவகச்சேரியில் உயிர்நீத்த 87 இற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் ஆத்ம சாந்திக்காகவே துக்கமும், ஹர்த்தாலும் அனுஷ்டிப்பது எனத் தென்மராட்சிப் பிரசைகள் குழு தீர்மானித்திருக்கிறது.

—இவ்வாறு தென்மராட்சிப் பிரசைகள்குழுச் செயலாளர் திரு. த. வேலாயுதம் விடுத்த

(6ம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

26 – 10 – 1988
ஐப்பசி – 10
புதன்கிழமை

சுபநேரம்:–
04-33 முதல் 06-03 வரை
ராகு காலம்:–
12-03 முதல் 01-33 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## ஓய்வூதியப் பணம் இந்தவார இறுதிக்குள்

யாழ்ப்பாணம், அக் 26

செப்டம்பர், அக்டோபர் மாதங்களுக்குரிய ஓய்வூதியப் பணத்தை இந்தவார இறுதிக்குள் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறு யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

செப்டம்பர் மாத ஓய்வூதிய வவுச்சர்கள் நேற்று வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அக்டோபர் மாத வவுச்சர்கள் இன்று அனுப்பிவைக்கப்படும்

இதற்க்கான காசோலைகளும் தயாரிக்கப்பட்டுவிட்டன – இவ்வாறு மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

### முச்சந்தி முரளி



தெற்கிலே ஆர்ப்பாட்ட ஏற்பாடெல்லாம் வெறும் பஸ்வாணமாய்ப் போச்சுது போலே...!

## அடகு நகைகள் மீளளிப்பு; அடுத்த கட்டம் விரைவில்

யாழ்ப்பாணம், அக். 26

யாழ் மாவட்டத்தின் மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைத்த நகைகளின் ஒரு பகுதி அடுத்த கட்டமாக அவற்றின் சொந்தக்காரர்களுக்கு விரைவில் வழங்கப்பட இருக்கின்றன.

அடுத்த கட்டத்தின் கீழ் சன்னதிட்டி, சங்கானை, புங்குடுதீவு ஆகிய பகுதிகளிலுள்ள மக்கள் வங்கிக்கிளைகளில் நகைகளை அடகு வைத்தவர்கள் அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்

இந்தப் பகுதியிலிருந்து பணம் செலுத்தியவர்களின் நகைகள் விரைவில் கொழும்பிலிருந்து இங்கே கொண்டு வரப்பட இருக்கின்றன

நகைகள் யாழ் வந்து சேர்ந்ததும் அவற்றை எந்த மக்கள் வங்கிக் கிளையில் எப்போது வந்து மீளப்பெறவேண்டும் என்பது போன்ற விவரங்களைத் தெரிவித்து மக்கள் வங்கி தனித்தனி கடிதங்கள் மூலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கும்.

இந்தக்கடிதம் கிடைத்ததும் உரியவர்கள் தங்கள் நகைகளை மக்கள் வங்கியின் பிரதான வீதிக் கிளையிலும், ஸ்ரான்லி வீதிக் கிளையிலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும். (உ ஜ)

## இளம்பெண் சுட்டுக்கொலை

வடமராட்சி அக். 26

கெருடாவிலில் நேற்று முன்தினம் நண்பகல் 2-30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளம் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் திருமதி சங்கரப்பிள்ளை எனத் தெரிவிக்கப்பட்டது. (உ- 16)

## இந்திராகாந்தி கொலை; எதிரிகள் இரகசியமாக தூக்கிலிடப்படுவர்

புதுடில்லி, அக். 26

மறைந்த பிரதமர் இந்திரா காந்தியைக் கொலை செய்த சதவன் சிங், கேஹர் சிங் ஆகியோரைத் தூக்கிலிடும் திகதியை நீதிபதி குறிப்பிட்டிருக்கின்றார்

ஆனால் பாதுகாப்பை முன்னிட்டு அவர்களைத் தூக்கில் போடும் திகதி முன்னதாக அறிவிக்கப் படமாட்டாது.

இரகசியமாக மரண தண்டனை நிறைவேற்றப் படும்.

இவர்கள் இருவருக்கும் விதிக்கப்பட்ட மரணதண்டனையை சுப்ரீம் கோட் உறுதிப்படுத்தியது.

அவர்களைத் தூக்கில் போடும் உத்தரவில் கடந்த 12 ஆம் திகதி புதுடில்லி மேலதிக நீதிபதி கையெழுத்திட்டிருந்தார் என்பது தெரிந்ததே

அந்த உத்தரவிலேயே நீதிபதி ஜெயின் எதிரிகளை தூக்கில் போடும் திகதி. இடம் ஆகியவற்றை கைப்பட எழுதி விட்டார்.

அந்த விவகாரம் நீதிபதிக்கும் திகார் சிறைச்சாலை அத்தியட்சகருக்கும் மட்டுமே தெரியும்.

அதுபற்றி எதிரிகளின் உறவினர்கள் உள்பட யாருக்கும் தெரியாது.

'கறுப்பு உத்தரவில்' நீதிபதி கையெழுத்துப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தேவைப்படும் வரை அமைதிப்படை இங்கிருக்கும்

### திருச்சியில் ராஜீவ் தெரிவிப்பு

திருச்சி, அக். 26

தேவைப்படும் வரை அமைதிப்படை இலங்கையில் இருக்கும்

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று முன்தினம் திருச்சியில் தெரிவித்தார்.

புதுடில்லியில் இருந்து தனி விமானம் ஒன்றில் திருச்சியில் வந்திறங்கிய பிரதமரை செய்தியாளர்கள் சந்தித்தனர்.

இலங்கையில் இருந்து அமைதிப்படை திருப்பியழைக்கப் படவேண்டும் என்று பிரதமர் பிரேமதாஸாவும் அமைச்சர் தொண்டமானும் கூறுகின்றனரே உங்கள் கருத்து என்ன? இப்படிச் செய்தியாளர்கள்கேட்டனர்

பிரதமர் காந்தி, 'அமைதிப்படையை திருப்பி அழைப்பது பற்றி ஜனாதிபதி ஜெயவர்த்தனா மட்டும் தான் கருத்து பேசவேண்டும் என்று பதிலளித்தார்.

## பரீட்சை ஒத்திவைப்பு

ஆரிய திராவிட பாஷா அபிவிருத்தி சங்கத்தினால் நாளை நடத்தப்பட ஏற்பாடாகியிருந்த ஆண்டு 11–இற்கான தமிழ்மொழி முன்னோடிப் பரீட்சை அடுத்த மாதம் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

ஒத்திவைக்கப்பட்ட பரீட்சைக்கான நேர சூசி மற்றும் வினாத்தாள்களை அந்தந்த பகுதி கொத்தணி அதிபர்கள் வட்டாரக் கல்வி அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். (உ-9)

## பிலிப்பீன்ஸில் சூறுவளி! 700க்கும் அதிகமானோர் பலி!!

மணிலா, அக் 26

பிலிப்பீன்ஸில் நேற்று வீசிய கடும் சூறுவளியினால் எழுநூறுக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். 511 பேருடன் சென்று கொண்டிருந்த பயணிகள் கப்பல் ஒன்று கடலில் மூழ்கியதில் அதில் இருந்த 18 பேரைத் தவிர மிகுதி அனைவரும் உயிரிழந்தனர்.

இந்தச் சூறாவழியினாலும், மழை வெள்ளத்தினாலும் மணிலாவையும் அதைச் சூழவிருக்கும் 7 ஆயிரம் தீவுகளும் பெரிதும் பாதிப்படைந்தன.

சூறுவளி 185 மணி வேகத்தில் வீசியதாகக் கூறப்படுகிறது (உ–எ)

## நகரில் இளைஞர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், அக 26

நேற்று காலை 9மணியளவில் யாழ் ஆஸ்பத்திரி வீதியில் இலங்கை வங்கிக்கு சமீபமாக இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வெல்டிங் டிரான்ஸ்போமர் (ஒட்டும் கருவி) நல்ல நிலையில் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும்; 175A, சிவன் பண்ணை ரோட், கொட்டடி, யாழ்ப்பாணம். (6428)

பாவித்த வீட்டுக் தளபாடங்கள் Brother தையல் மெஷின், சாப்பாட்டு மேசை, Hall set மேசை, Show Case, Typewritter, கண்ணாடி மேசை, Drill Pram Stainless Steel Zink கட்டில் மெத்தைகள் மற்றும் பொருள்களும் மிகவும் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. 122 சிவன்கோயில் வீதி, திருநெல்வேலி தெற்கு. (7449)

கேரதீவு - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள குழாய்க் கிணறு, மின்சார வசதியுடனான வீட்டுடன் 2½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. விலாசம் K.அரியராசா நாவற்குழி கிழக்கு (மகா வித்தியாலத்திற்கு அண்மையில்) தச்சன் தோப்பு, தொடர்பு. K. அரியராசா, 302, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் (7361)

## SALE

Video cameras & Production Mixers for Sale JVC (GXN 70E) National Fio (Genlock) sony 3000- Sun Suie special effect production mixer National MX 10- mixer For futher details contact: Sun Video Complex, School Lane, Kondavil West. Kondavil (7607)

## மலிவு விற்பனை

முற்றிலும் புதிய டிசைன்களில் உருவான தீபாவளி வாழ்த்து மடல்கள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு. பார்வையிடவும் கொள்வனவு செய்யவும் மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி. பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (7601)

Broiler (இறைச்சிக் கோழி) களின் விலை குறைத்துள்ளோம். கூடுதலாக எடுப்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு. கத்தரி நாற்றுக்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 1. அண்ணபாம், இணுவில். 2 செம்மா தெரு, ஜும்மா மொஸ்க் லேன், யாழ்ப்பாணம். (C/665)

## தீபாவளி பிறந்தநாள் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை யாழ்ப்பாணம். (C 357)

## தேவை

ஆண்டு 5இலும் ஆண்டு 2இலும் படிக்கும் அச்சுவேலியில் இருக்கும் இரு பிள்ளைகளுக்கு கிழமையில் 5 – 6 நாட்கள் 1½–2 மணித்தியாலம் வீட்டிற்கு வந்து பாடம் சொல்லிக் கொடுக்க ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். விபரங்களுடன் எழுதுக விளம்பர இல. 2 C/o உதயன். [7432]

## வலம் புரிச்சங்கு

இல்லங்களில் இலட்சுமிகரம் நிலவுவதற்கும் ஆலயங்களில் பூஜை, ஆராதனைகளுக்கும் உகந்த சிறந்த வலம்புரிச் சங்குகள் விற்பனைக்கு உண்டு. ஆகச் சிறியதன் விலை ரூ 100/- தொடர்பு: தாஸ், 188, புதுச் செட்டித் தெரு, கொட்டாஞ்சேனை, கொழும்பு-13. 7360)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohmann வெள்ளைசிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Hyline கறுப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: நல்லூர் பாம்சென்ரர், C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன். நல்லூர். (6881)

Nallur Farm Centre கோழிக்குஞ்சுகளின் விலை குறைக்கப்பட்டுள்ளது. 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், நல்லூர், யாழ்ப்பாணம். (6988)

Golden Comet 4½ மாத பேட்டுக் கோழிகள் (Point of Lay) புதன்கிழமையும் 3½ மாத பேட்டுக் கோழிகள் வெள்ளிக்கிழமையும் விநியோகிக்கப்படும் சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (7440)

## கோழிக்குஞ்சு விற்பனை

Hisex Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகள் Hyline வெள்ளை கறுப்பு பேட்டுக்குஞ்சுகள் கறுப்பு சேவற்குஞ்சுகள், புரொயிலர் குஞ்சுகள் 28-10-88 வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (7250)

BAIRAHA FARMS HYBRO, CHRISTOMBU FARM HUBBARD. புரொயிலர் குஞ்சுகள் 100க்கு மேல் விலை 16/-, தேவையான தொகை முன்கூட்டியே பதிவுசெய்து பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (7441)

பிறிமா இன ஒருநாள் முட்டையிடும் வெள்ளை, சிவப்பு கோழிக் குஞ்சுகளும், புரோயிலர் மற்றும் சேவல் குஞ்சுகளும் 22-10-88 முதல் விநியோகிக்கிறோம். தேவைப்படுவோர் உடன் பெற்றுக்கொள்ளலாம். M.G.M. Foroge Stores No: 208 1st Cross st- Jaffna. (7428)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Broiler இறைச்சிக் கோழிகள் பேட்டுக் கோழிகள் சேவற் கோழிகள்குஞ்சுகள், சூப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- Nallur Farm Centre C/o Nallur வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர். (6882)

## தேவை

எமது ஸ்தாபனத்துக்கு காசாளர் தேவை. ஓய்வுபெற்ற அரச ஊழியர்கள் 45 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் நன்று நகை வியாபாரம் தெரிந்திருப்பின் முன்னுரிமை வழங்கப்படும். நபீஸா ஜுவல்லர்ஸ், 171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (7606)

## தவறிவிட்டன

யேசுதாசன் லெஸ்லி டேவிட் பஸ்தியாம் பிள்ளை 512652212 V, ரேஜினி கொன்செப்டா நீக்கிலஸ் 588421163 V ஆகியோரின் அடையாள அட்டைகள் தவறிவிட்டன. கண்டு எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (7609)

## வீடியோ படப்பிடிப்பு

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள, அமங்கல நிகழ்ச்சிகளை 3 கமெராக்கள் பொருத்தி புதுமையான முறையில் வீடியோ படப்பிடிப்புச் செய்திட "பிரதீப் மூவிஸ்", புது வீதி, கொய்யாத்தோட்டம், (கிளைகள் இல்லை) தொடர்புகட்கு:- 'துஸ்' சுணில்) (6980)

## ஆண்டு 11 இலத்திரனியல்

திருத்திய இரண்டாம் பதிப்பு இலத்திரனியல் புத்தகம் முழு விபரங்களையும் உள்ளடக்கி, வினா-விடையுடன் கூடியதாக விற்பனையாகிறது. விநியோகஸ்தர்கள்:- பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்நகர். [7429]

## வகுப்புக்கள்

A/L 89 கலை, வர்த்தக மாணவர்களுக்கான வினா விடை வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன. மொடேன் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி. கிளைகள்:- பருத்தித்துறை, வவுனியா. (7220)

## வினாத்தாள்கள் வந்தன

யாழ்.தொழில் நுட்பக் கல்லூரியில் எதிர்வரும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி வரை நடைபெற வேண்டிய பரீட்சைகளுக்கான வினாத் தாள்கள் வந்து சேர்ந்துள்ளன என்று அறிவிக்கப்படுகிறது. (இ-9)

---

# ‘M’ THREE TRAVEL

## பெருமையுடன் வழங்கும்

## உடனடி வேலைவாய்ப்புக்கள்

கீழ்க்காணும் வெற்றிடங்கள் தற்போது எம்மிடம் உண்டு. உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்யப்படும்.

### SAUDI

1. Heavy Vehicle Meachanic, Diesel & Petrol 4 Vacancies
   மெக்கானிக், டீசல் & பெற்ரோல்
2. Auto Electricions 2 Vacancies
   வாகன மின்சார வேலையாட்கள் 2 பேர்
3. Saudi Cleaners
   சவூதி கிளீனேர்ஸ்

21 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வெகுவிரைவில் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்

### KUWAIT குவைத்

1. Kuwait undoor Cleaners 100 Vacancies

20 வயதிறகு மேற்பட்டவர்கள் செல்ல விரும்புபவர்கள் உடனடியாக எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

நம்பிக்கை, நாணயம் என்பவற்றிற்கு நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம்

### ‘M’ THREE TRAVEL

* புதிதாக கடவுச் சீட்டு செய்ய விரும்புபவர்களுக்கு கடவுச்சீட்டு எடுத்துக் கொடுக்கப்படும்.

** எங்களிடம் புதுக் கடவுச் சீட்டு செய்பவர்கள் எங்கள் மூலம் வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்ல விரும்பினால் உடனடியாக விசா செய்து கொடுக்கப்படும்.

*** பொன்ட் (Bond) செய்து கொடுக்கப்படும்.

இவை எல்லாவற்றிற்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

## த. இந்திரநாதன்

சோதிலேன்,
கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.

No. 1, 2ஆர் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C-670)

---

# தேவை

எமது தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள லேத் இயக்குனர் (Latheman) ஒருவரும், வார்ப்பு வேலையாளர் (Foundryman) ஒருவரும் தேவை. அண்மையில் பெற்ற இரண்டு நற்சாட்சிப் பத்திரத்துடனும், கிராமசேவையாளரின் நற்சாட்சிப்பத்திரத்துடனும் விண்ணப்பிக்கவும்.

**Manager,**
**United AgroEngineering,**
NAVATKULY, KAITHADY.

(C/667)

---

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்:
02 - 03 - 1953

அகால மறைவு:
06 - 11 - 1987

திதி:
26 - 10 - 1988

## சோமசுந்தரம் பரமகுரு

(பொறியியலாளர். இ போ. ச. மூதூர்)

அறிவும் ஆற்றலும் நிறைந்த நம் செல்வமே! பல்கலையும் கற்று வல்லவனாய் வருவாய், வாழ் நாள் எலலாம் வாழ்வாய் என்று கனவு கண்டோம். பேரிடி விழுந்தது நம் வாழ்வில். பெருந்துயரில் வாழ்கின்றோம். அன்புடன் பண்புடன், பாசத்துடன் பழகி நம்மை எல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டுப்பிரிந்தவரே! ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும் உன்நினைவு எம்மை விட்டு அகலாது. உன் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

K. V. சோமசுந்தரம்
குடும்பத்தினர்

"நேசபவனம்"
வீரமாணிக்க தேவன்துறை,
மயிலிட்டி சந்தி,
மயிலிட்டி.

(7452)

---

# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



## சி ரு. நா. நா. செல்வத்துரை

தோற்றம்: 03 – 12 – 1913

மறைவு: 27 - 09 - 1988

அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தியோருக்கும் பல வழிகளிலும் உதவி நல்கிய உற்றார், உறவினர். நண்பர்களுக்கும் அனுதாபச்செய்திகள் அனுப்பிய அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

27 – 10 88 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்பாய் வேண்டுகின்றோம்.

— மனைவி, பிள்ளைகள்.

88, கச்சாய் ரோட்,
சாவகச்சேரி,

(7549)

---

# CAKE EXHIBITION

An Exhibition of decorated Cakes & Sugarcraft will be held at the residence of

**Mrs. T. Mather**

by her pupils on :

**Friday October 28th 12 noon - 6p.m.**
**Saturday October 29th 9a.m. - 6p.m.**

at Lowton Road, Manipay.
(Near Manipay Hindu College)
Entrance by Tickets — Rs. 5/-

(7552)

---

# WALK-IN INTERVIEW

# உடனடித் தேர்வு

பின்வரும் வெற்றிடங்களுக்கு எம்மால் உடனடியாக ஆட்களை அனுப்ப முடியும்.

## SAUDI

| | Nos | Salary |
|---|---|---|
| 1. House Drivers | 20 | 600 SR |
| 2. Labourers | 35 | 400 SR |

2 Years Contract.
Food & Accommodation Provided Free.

**Immediate Vacancies in LEBANON**

| | Nos. | Salary |
|---|---|---|
| Labourers | 50 | 125 U.S. Dollars |

(Food Allowance: 25 U.S. Dollars)
Food & Accommodation Provided Free

## SAUDI & KUWAIT

**SAUDI**
**House Maid / House Driver - Couples**
**House Maids for KUWAIT**
Muslims & Non Muslims.
Attractive Salaries
English Speaking Females Preferred.
Please call at address below:

# Trans World Associates Ltd.

Travels & Foreign Employment (Division)

**Kokuvil Junction,**
**KOKUVIL.**

(7446)

---

# வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கம்

## முக்கிய அறிவித்தல்

1988 நவம்பர் 1ஆம் திகதி தொடக்கம் எமது அங்கத்துவ சிகை அலங்கரிப்பு நிலையங்களில் கீழ்வரும் புதிய கட்டண அடிப்படையில் சலார் விகிதம் அமையுமென அறியத் தருகிறோம்.

பெண்கள் 20 ரூபா, பெண்பிள்ளைகள் 15 ரூபா, பெண் குழந்தைகள் 10 ரூபா, ஆண்கள் சிகை, முகம் அலங்கரிப்புடன் 'கிற்றர்' பிடிக்கவும் 13 ரூபா, தனியாக சிகையலங்கரிக்க 10 ரூபா, சிறுவர்களுக்கு சிகையலங்காரம் 7 ரூபா, தாடி அமைக்க 6 ரூபா, பிளேற் சேவ் 5 ரூபா, சேவ் மட்டும் 4 ரூபா. தனியாக 'கிற்றர்' பிடிக்க 4 ரூபா

இந்தப் புதிய கட்டண விகிதங்கள் ஏனைய மாவட்டங்களில் இருந்தும் மிகக் குறைவானதென்ற உண்மையை வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தலைவர்:
சு. இராசேந்திரம்

செயலாளர்:
செ. சிவராசா

(C-666)

---

# 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் சபிண்டிகரண அழைப்பும்

அமரரான எங்கள் அன்புத் தாய்

## திருமதி சிவபாக்கியம் இராஜகோபால்

தோற்றம்: 6 06-1899

மறைவு: 27-09-1988

27-10-1988 வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு மேல் அன்னாரின் இல்லத்தில் கிரியைகள் நடைபெறும். அத்தருணம் தங்கள் குடும்பத்துடன் வந்து கிரியைகளை சிறப்பித்து அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்தித்து சபிண்டீகரணத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"சாந்தினிகேற்றம்"
6, மகாத்மா காந்தி வீதி,
யாழ்ப்பாணம்.

(7548)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது பிறந்த தின வாழ்த்து



### ★ செல்வி செ. நிருபா ★

அச்சுவேலி சங்கானை ரோட்டைச் சேர்ந்த செல்வரத்தினம் சாரதா தம்பதிகளின் செல்வப் புதல்வி நிருபா இன்று தனது முதலாவது பிறந்த தினத்தை வெகு விமரிசையாக தனது "சாரதா" இல்லத்தில் கொண்டாடுகின்றார்.

இவரை பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென அப்பா, அம்மா, அம்மம்மாமார், சித்தி, சித்தப்பாமார், பூட்டி ஆச்சி, அத்தைமார், மாமா, மாமிமார், சுவீஸ் மச்சான், குவைத் மச்சான், குவைத் மாமா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் வாழ்த்துகின்றார்கள். (7534)

# இடம் பெயர்ந்ததுக்கான அத்தாட்சி கோருவது நியாயமற்றது

## வலி வடக்கு பிரசைகள் குழுக்கள் ஒன்றியம் புனர்வாழ்வு நிர்மாணத்துறை அமைச்சுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம் அக் 26

அசம்பாவிதங்களை அடுத்து இடம்பெயர்ந்தவர்களுக்காக வழங்கப்படவிருக்கும் இரண்டாயிரம் ரூபாவைப்பெற்றுக் கொள்வதற்குத் தமது வதிவிடங்களை விட்டு வெளியில் தங்கியிருந்ததற்கான அத்தாட்சிப் பத்திரம், புகைப்படங்கள், அடையாளக்கார்ட்டுகள்சமர்ப்பிக்கவேண்டுமென்றுகோரப்பட்டிருப்பது நியாயமற்றது.

இந்த ஆவணங்கள் கோரப்படும்முறையைத் தவிர்த்து அசம்பாவிதங்களின்போது இடம்பெயர்ந்த சகலகுடும்பங்களுக்கும் நிவாரணப் பணம் வழங்கப் படவேண்டும்.

வலிகாமம் வடக்குப் பிரசைகள்குழுக்கள் ஒன்றியம் புனர்வாழ்வு நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறது. அந்தக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதவாது;-

அண்மைகால அசம்பாவிதங்களை அடுத்து இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு அரசாங்கம் இரண்டாயிரம் ரூபாவை குடியேற்ற அலவன்ஸாக வழங்கவிருப்பதாக அறிகிறோம்.

இந்த நிவாரணப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காகக் குடியிருப்பாளர்களின் பட்டியலைத் தயாரிக்கும்படி கிராமசேவை அலுவலர்கள் அறிவுறுத்தப் பட்டிருக்கின்றனர்.

குடியிருப்பாளர்களின் வீடு சேதமடைந்திருப்பின் அந்த சேதம் பற்றி நிரூபிப்பதற்கு புகைப் படங்கள், பொலீஸ் அறிக்கைகள் ஆகியவற்றை விண்ணப்பத்தாளில் சமர்ப்பிக்க வேண்டுமென்றும் அறிகிறோம்.

ஆனால், சேதம் பற்றிய முறைப்பாடுகளைத் தெரிவிப்பதற்கு அசம்பாவிதங்கள் இடம் பெற்ற காலப் பகுதியில் பொலீஸ் நிலையம் எதுவும் இயங்கவில்லை என்பது பொதுவாக எல்லோரும் அறிந்த ஒன்றாகும்.

மேலும் சேதம் பற்றிய புகைப்படங்களை எடுப்பதற்கு புகைடபடஸ்ருடியோக்கள் எதுவும் இருக்கவுமில்லை.

அதனால் விண்ணப்பதாரிகளிடமிருந்து இந்த ஆவணங்களைக் கோருவது நியாயமற்றதாகும்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ-ஐ)

## கொக்குவில் இந்துவில் விஜயதசமி விழா

மானிப்பாய், அக். 26

கொக்குவில் இந்துக் கல்லூரியில் மாணவர்கள் விஜயதசமிவிழாவை அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடினர்.

கல்லூரி உப அதிபர் திரு. இ. மகேந்திரன் தலைமையில், சமுதாய முன்னேற்றத்திற்கு தோள் வலிமையா, நா வலிமையா சிறந்தது என்ற வழக்காடு மன்றம் நடைபெற்றது.

ஆசிரியர்கள் திரு. இ. மா. சிவசுப்பிரமணியம், திரு. க. நரேந்திரன் ஆகியோர் தலைமையில் மாணவ - மாணவிகள் வழக்காடு மன்றில் உரையாற்றினர்.

விவாதத்தை முடித்து வைத்துப் பேசிய உப அதிபர் திரு இ. மகேந்திரன் இவ்விவாதத்தில் தோள் வலிமை பற்றி வாதிட்டவர்களின் வாதத்திறமையைப் பாராட்டி வழக்காடு மன்றத்தில் பக்கம் சாராமல் தீர்ப்பளிக்கும் மரபுக்கிணங்க தீர்ப்பளிக்கும் முடிவினைச் சபையோரிடம் ஒப்படைத்தார்.

கல்லூரிமாணவிகளின் பஜனை, மாணவர்களின் பக்திப்பாடல்கள் ஆகியனவும் இடம்பெற்றன. (இ-9)

## பாலர் கல்வியிலேயே எதிர்காலம் தங்கி உள்ளது

பாலர்களுக்கு அளிக்கப்படும் கல்வியில்தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கிறது.

மானிப்பாய்திருவள்ளுவர் சனசமூக நிலையத்தினரின் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மானிப்பாய் மெமோறியல் வித்தியாலய அதிபர் திரு வி. பொன்னுத்துரை மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி பாடசாலை விளையாட்டுப் போட்டி திருவள்ளுவர் சனசமூக நிலையத் தலைவர் திரு. சி. வி. பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

கட்டுடை கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு த. சிவகுமாரன் இப்போட்டிகளில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு கொடியேற்றிப் போட்டிகளை ஆரம்பித்து வைத்தார்.

## யெகோவாவின் சாட்சிகள் மாநாடு சாவகச்சேரியில்

யாழ்ப்பாணம், அக் 26

யெகோவாவின் சாட்சிகளின் வட்டார மாநாடு எதிர்வரும் 29 ஆம் 30 ஆம் திகதிகளில், சாவகச்சேரி-பேரம்பலம் வீதி, பெரியமாவடியில் அமைந்துள்ள ராஜ்ய மன்றத்தில் நடைபெறும்

சனிக்கிழமை 29 ஆம் திகதி காலை 8-55 மணிக்கும் ஞாயிறு 30 ஆம் திகதி காலை 8-50 மணிக்கும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

''தேவபயத்துடன் பரிசுத்த சேவையை வழங்குதல்'' என்ற பொருளில் இம் மாநாட்டு நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன.

நிகழ்ச்சிகளின் உச்சக் கட்டமாக அமைய இருப்பது ''மெய்யான தேவனுக்கு ஏன் பயந்திருக்கவேண்டும்'' என்ற பொருளில் நிகழ்த்தப்படும் பகிரங்கப் பேச்சாகும்.

இப்பேச்சு ஞாயிறு பிறபகல் 1-10 மணிக்கு காவற்கோபுர சங்கப் பிரதிநிதி திரு. எஸ். தியோபிலஸ் அவர்களால் நிகழ்த்தப்படும். (இ)

## கல்யாண மண்டபம்

நெடுந்தீவு, அக். 26

புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரி அமமன கோவில் தேவஸ்தானம் கல்யாண மண்டபம் ஒன்றை அங்கு அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. (இ-111)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வி நிருஷா

'எழில் நிலா' உடுவில் வீதி, மானிப்பாயைச் சேர்ந்த இலகுநாதன் இரத்தின மலர் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி நிருஷா இன்று (26. 10. 88) தனது முதலாவது பிறநத நாளை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா (கட்டார்) அம்மா, நிலானி அக்கா, அம்மப்பா, அம்மம்மா சின்னமாமா, சித்தப்பா, சித்தி, மற்றும் கொக்குவில் பெரியமாமா, அத்தை, திவ்யன் மச்சான், மல்லாகம் மாமா, அத்தை, மச்சான்மார், அல்லைப்பிட்டி அப்பப்பா, சித்தப்பா, மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார், அண்ணன்மார், மற்றும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் மருதடிவிநாயகரின் அருள்பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகினறார்கள். (7530)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமிக்கப்பட்ட கிராம சேவையாளர் பிரிவில்

# ஆரம்ப கல்விஆசிரியர்கள்

## 10 வருடம் கடமையாற்ற வேண்டும்

மட்டக்களப்பு அக் 26

அண்மையில் புதிதாக நியமனம்பெற்ற ஆரம்ப கல்வி ஆசிரியர்கள் தாம் நியமனம் பெற்றுள்ள கிராமசேவையாளர் பிரிவில் 10 வருடங்கள் கடமையாற்ற வேண்டும்.

மேற்கண்டவாறு கல்விச் சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தவிச் சிங்களத்தில் வழங்கப்பட்டுள்ள இக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள ஏனைய முக்கிய விடயங்கள் வருமாறு;

விண்ணப்பம் செய்துள்ள கிராம சேவை அலுவலர் பிரிவில் வெற்றிடம் இல்லையேல் இவர்கள் மாவட்டத்திலுள்ள எப்பாடசாலையிலும் கடமையாற்றவேண்டும்.

சேவை நிரந்தரமானது ஓய்வூதியமுடையது. 3 வருடம் தகுதி காண்நிலையின் பின்பு சேவை உறுதிப்படுத்தப்படும். ஆனால் பயிற்சியின்பின் நடைபெறும் பரீட்சையில் சித்திபெற வேண்டும். அதன் பின்பு தான் நிரந்தரமாக்கப்படும்.

வைத்திய பரிசோதனை செய்ய வேண்டும். இலங்கையில் எப்பகுதியிலும் சேவைபுரிய உடல்நல ரீதியில் தகுதியுடையவரென உறுதிப்படுத்தப்படாவிட்டால் நியமனம் ரத்துச் செய்யப்படும்.

மாவட்ட சேவை திட்டத்தின் கீழ் நியமனம் வழங்கப்பட்டுள்ளதால் எக்காரணம் கொண்டும் பிறமாவட்டத்திற்கு மாற்றம் கோர முடியாது. ஆனால் பதவி உயர்வு ரீதியில் நியமனம் வேறு மாவட்டத்துக்கு வழங்கப்பட்டால் தேவை கருதி இடமாற்றம் வழங்கும் உரிமை கல்விச் சேவைக் குழுவுக்கு உண்டு.

பிறமாவட்டம் கோர மாட்டோம் என ஒப்பந்தம் செய்ய வேண்டும். ஆனால் பிற மாவட்ட வெற்றிடம் கோரப்படும்போது விண்ணப்பம் செய்யலாம். தெரிவு செய்யப்பட்டால் விடுவிக்கப்படுவார்.

10 வருடங்கள் தற்போது கடமையாற்றும் பாடசாலையில் கடமையாற்ற வேண்டும். 10 வருடத்திற்குள் மாவட்டத்திலும் இடமாற்றம் கோர உரிமை இல்லை.

பிணை கோரப்பட்டால் அதற்கு தயாராகவிருத்தல் வேண்டும்.

அரசகரும மொழியாகிய சிங்களத்தில் வேலை செய்யும் அறிவுபெற்றிருத்தல் வேண்டும். சேவை நிரந்தரமாக்குதல் ஏனைய காரணிகளுடன் இதுவும் அடங்கும். விவரம் இல. 701 திறைசேரி சுற்றறிக்கையில் உண்டு.

தகுதிகாண் காலத்தில் சேவையில் திருப்தியின்மை சிங்களத்தில் தேவையான தரத்தில் சித்தியின்மை காணப்பட்டால் வேலை நீக்கப்படும்.

அரச கரும மொழிக் கொள்கை 1956 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க அரச கரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்தும் பொருட்டு ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ள, இனிமேல் ஆக்கப்படவுள்ள பிரமாணங்களுக்கேற்ப ஒழுக வேண்டும்

(இ-21)

# மலையக இளைஞரை விடுவிக்க பொது வேலை நிறுத்தம் அவசியம்

## இளஞ்செழியன் வலியுறுத்து

அட்டன் அக் 26

அரசியல் கைதிகளாக சிறைகளில் வாடிக் கொண்டிருக்கும் மலையக இளைஞர்களை விடுதலை செய்ய வேண்டும் அதற்காக மலையக தொழிற் சங்கங்கள் அனைத்தும் ஒரு பொது வேலை நிறுத்தத்திற்கு முன் வர வேண்டும் இதனைச் செயல்படுத்த இளைஞர்கள் தொழிற்சங்கங்களை நிர்ப்பந்திக்க வேண்டும்.

புதிய ஜனநாயக முன்னணி பொதுச் செயலாளர் திரு ஏ இளஞ்செழியன் இப்படி கூறினார்.

தலவாக்கொல்லை நகர மண்டபத்தில் மலையக அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான மக்கள் இயக்கத்தின் நான்காவது கூட்டம் அண்மையில் நடைபெற்றது. திரு. ந தி பிரான்ஸிஸ் சேவியர் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். இங்கு வைத்தே இதனை அவர் தெரிவித்தார்.

திரு இளஞ்செழியன் மேலும் தெரிவித்ததாவது:-

எமக்கு ஆயுதங்கள் மீது நம்பிக்கை இல்லை. மக்கள் மீது நம்பிக்கை இருக்கிறது. பத்து லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கினுல் இந்த நாட்டில் கோடிக் கணக்கான ரூபா நஷ்டம் ஏற்படும். அந்நிய செலாவணி முடங்கிவிடும்.

இவ்வளவு பெரிய சக்தியைப் பெற்றுள்ள மலையக சமூகம் இருநூறுக்கும்மேற்பட்ட தம் இளைஞர்களை விடுவிப்பதற்கு எந்தவித போரட்டமும் செய்யவில்லை.

20 ஆண்டுகளுக்குமேல் சிறைத்தண்டனை பெற்றவர்கள் கூட விடுதலை பெற்றுச் சுதந்திரமாக வெளியில் திரிகிறார்கள் ஆனல் 200க்கும் மேற்பட்ட மலையக அரசியல் கைதிகள் சிறைகளில் கொடுமைகளுக்குள்ளாக்கப்பட்டு மரண வேதனையை அனுபவித்து வருகிறார்கள்.

சொந்தவீடுஇல்லை: நிலமில்லை: சுதந்திரமும் இல்லை, இருந்தும் அரசியல் விழிப்பின்றி அசையாமல் மலையகம் இருக்கின்றது. இப்போது நீர்த்தேக்கங்கள் மூலம் கூட்டமாய் இருக்கும் மக்களை கலையச்செய்து விரட்டத் தொடங்கிவிட்டார்கள். மலையகத்தமிழரை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும்.

எனவே தொழிற்சங்க தலைமைகளை நிர்ப்பந்தப் படுத்தி அரசியல்போராட்டத்திற்குஇறக்கவேண்டும். எம் அடிப்படை உரிமைகளையும், இளைஞர்களின் விடுதலையையும் பெறவேண்டும்.

—இப்படி அவர் கூறினார்.

மத்திய மாகாணசபையின் எதிர்க்கட்சியின் நிர்வாக துணைத் தலைவர் திரு. ஒ. ஏ. இராமையா, டாக்டர் ஏ.சாந்தகுமார் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

## சுங்க உதவி சேகரிப்பாளர் சங்கம்

யாழ்ப்பாணம். அக் 26

சுங்கத் திணைக்கள உதவி சேகரிப்பாளர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின் வருவோர் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஜே எச். அபேரத்ன, உப தலைவர்: திரு எஸ் சி. குணவர்த்தன, செயலாளர்: என். ஏ. பெரேரா, பொருளாளர்: திரு. எஸ் மிரிஹறன். (ச)

### ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் நாகமுத்து இரத்தினம்
(இளைப்பாறிய விகிதர்)

| படைப்பு. | அழிப்பு: |
|---|---|
| 18 - 09 - 1920 | 26 - 10 - 1987 |

எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயருறும்
மனைவி, மகள், சகோதரர்கள்,
பெருமக்கள், மருமக்கள்,
உறவினர், நண்பர்கள்.

தகவல்:
இ. தாண்டேஸ்வரன்,
41, சபாபதி வீதி,
கொக்குவில். (7292)

### ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் சோமசுந்தரம் பாலச்சந்திரன்

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 6 - 9 - 1964 | 26 - 10 - 1987 |

திதி: ஐப்பசி பூர்வ சதுர்த்தி 13-11-88

எம்மை எல்லாம் பேரிடியில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புச் செல்வமே!


இறைவன் திருவடியில் உங்கள் ஆத்மா சாந்தியடைய கண்ணீர்ப் பூக்களினுல எம் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

என்றும் உம்பிரிவால் தத்தளித்துக் கொண்டிருக்கும் குடும்பத்தினர்:

அப்பா, அம்மா, அண்ணா,
மச்சான், தங்கைமார்.

கொக்குவில் ரோட்,
திருநெல்வேலி. (7419)

### 31ஆம் நாள் நினைவஞ்சலி



பாலசற்குணம் சிவபாலன் (பாலன்)

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 27-03 1965 | 26 10-1988 |

பாசத்தின் திருவிளக்கே பண்புள்ள தலைமகனே அன்பிற்கோர் சோதரனே! ஜேர்மனிக்கு சென்ற உம்மரவை களிப்புடன் நாம் பார்த்திருக்க, திடுக்கிட வைத்த வோர் செய்தி கேட்டு நாம் எல்லாம் சிந்தை கலங்கி நிற்கையிலே! எம்துயரே தம்துயராய்க் கொண்டு எமக்கெல்லா வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும் மற்றும் மேற்கு ஜேர்மனியைச் சேர்ந்த நண்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உம் பிரிவால் துயருறும்.

அன்பு அப்பா, அம்மா,
தம்பிமார், தங்கைமார்,
உற்றார், உறவினர்கள்.

38, சாரைக்காட்டு லேன்,
நாச்சிமார்கோவிலடி. [illegible]

# ஆஸ்பத்திரி கிளீனர்ஸ்
## சவூதிஅரேபியாவில் உடனடியாக வேலைவாய்ப்பு

**200 பேர் ஆஸ்பத்திரி கிளீனர்ஸ்**
சம்பளம் 400 SR (ஆண்கள்)
வயது 21 — 48 வரை

ஒரு வாரத்தில் பயணம் செய்யலாம். கடவுச் சீட்டும் கடவுச் சீட்டையுடையதான மூன்று படங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

**KUWAIT**
**30 பேர் சம்பளம் 35 K.D.**
உடன் தேவை
இரண்டு மாதத்திலுள் பிரயாணம் செய்யலாம்

Please Contact:
**T. V. TRAVELS & TOURIST**
BROWN ROAD,
Railway Station (front)
(C662) KOKUVIL.

### எமது அன்னையின் முதலாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



அமரர்
திருமதி இரத்தினம் நாகரெத்தினம்

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 13- 08- 1919 | 07- 11- 1987 |


திதி: 26- 10- 1988

இமைபோன்று எமைக்காத்து
இறையோடு இணைந்தாய் அம்மா
கலங்காத இதயமதை
ஏன் எமக்கு அளிக்கவில்லை
எம்நிழலில் வாழுமுன்னே
ஏன் இறைவன் பறித்திட்டான்
கலங்குகின்றோம் எந்நாளும்
எமைக் காத்திடுங்கள் தெய்வமே!
அம்மா!!

பிள்ளைகள் மருமகன்மார்,
பேரப்பிள்ளைகள்.

"இரத்தினமகால்"
கரம்பொன்— கிழக்கு,
ஊர்காவற்றுறை. (7542)

### ஓராண்டு நினைவஞ்சலி



திரு. தம்பிராசா துரைராசா

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 25 - 08 - 31 | 08 -11 - 87 |


திதி: 27. 10. 88

எதிரிப் படையுருவில் வந்த கூற்றுவனே எங்கள் அன்புத் தெய்வத்தின் உயிரைப் பறித்தாயோ ஆண்டவனே! மரணத்தை நினைக்கு முன்னே ஒரு நொடியில் மாய்த்து விட்டாயோ எங்கள் தெய்வத்தை, துணையாக நான் இருப்பேனென்று சொல்லிக் கூட்டிச் சென்றாயோ நெடியாம்பதியானே!! ஐயா! நீங்கள் எங்கு சென்றீர்? நித்தம் நித்தம் உங்கள் பிரிவால் வாடும்,

மனைவி, மக்கள்.

நெடியகாடு,
வல்வெட்டித்துறை [7536]


# புரோட்டீன் நிறைந்த புரோட்டீனெக்ஸ்® பக்கெட் ஒன்றை இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும்
சக்தியை மீட்டுத் தருகிறது

சில்லறை விலை
ரூபா 68/55
125 கிறாம்

Pfizer

® ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பான் பவர்க்கு.

**பொருள்:**
நட்புச் செய்த பிறகு நட்பை உடையவர்க்கு அதில் இருந்து விடுதலை இல்லை; ஆகையால் ஆராயாமல் நட்புச் செய்வதைப் போல் கெடுதியானது வேறு இல்லை


உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல. 292/2நாவலர் வீதி, தொலைபேசி: 24805
யாழ்ப்பாணம் 22073
26-10 1988 த. பெ இல 23


## கொள்ளைத் தடுப்புக் குழுக்கள்

ஆயுத பாணிகள் நடத்தும் கொள்ளைகளால் மக்களுக்கு ஏற்படும் நஷ்டங்களையும், பதற்றத்தையும், பாதிப்பையும் குறித்து இப்பத்தியில் ஏற்கனவே பல தடவைகள் எழுதி உள்ளோம் இவற்றைத் தடுக்க மக்கள் தான் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என்றும் கூறி இருந்தோம்.

கொள்ளைகளைத் தடுப்பதில் உதவியற்ற நிலையில் மக்கள் இப்போது உள்ளார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். வடக்கு கிழக்குப் பகுதிகளில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட எந்த உத்தியோக பூர்வ அமைப்பும் இல்லை.

தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்குவதற்கே எந்த நிறுவன ரீதியான, உத்தியோக பூர்வ அமைப்பும் இல்லாதபோது, கொள்ளைகளைத் தடுக்க முன்னரைப் போல பொலீஸ் போன்ற நிறுவன உதவியை எப்படி எதிர்பார்ப்பது?

இந்தப் பாதகமான நிலையைத் தக்கபடி பயன்படுத்தி, மக்களைத் தொல்லைப்படுத்தி வருகிறார்கள் கொள்ளையர்கள். தமது அநியாயச் செயலுக்கு ஆயுதங்களைத் துணைக்குத் தேடிய இந்தச் சமூக விரோதக் கும்பல்கள், இப்போது முகமூடிக் கொள்ளையர்களாக மாறி வருகிறார்கள்.

கடந்த ஞாயிற்றுக்கிழமையும் கோண்டாவிலில் கொள்ளையர்கள் பெரும் எண்ணிக்கையில கூட்டமாகச் சென்று — ஆயுதபாணிகளாக முகமூடிகளை அணிந்து சென்று— பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை பல வீடுகளில் இருந்து அபகரித்துச் சென்றுள்ளார்கள்.

கோண்டாவிலில் மட்டும் அன்றி குடா நாட்டின் எல்லாப் பகுதிகளிலுமே கொள்ளையர்களின் அட்டகாசம் அதிகரித்து வருகிறது. அவர்கள் இடத்துக்கு இடம், நேரத்துக்கு நேரம் புதிய உத்திகளைக் கையாண்டு மககளைத் துன்புறுத்தி வருகிறார்கள். அவர்கள் பாடுபட்டுத தேடிய உடைமைகளை அபகரித்து வருகிறார்கள்.

அனேக கொள்ளைகள் குறித்துக் கிடைக்கும் உட்தகவல்களை நோக்குமிடத்து. கொள்ளையடிக்கப்படும் வீட்டுச் சொந்தக்காரரின் உள்விவகாரங்களை, பின்னணிகளை, இரகசியமாக இருக்க வேண்டிய விடயங்களைத் தெரிந்து கொண்டே கொள்ளையர்கள் இந்த அநியாயத்தைப் புரிகிறார்கள் என்பது புலனாகிறது.

எப்படியோ ஒரு வகையில் கொள்ளையடிக்கப்படும் வீட்டுக்கு அல்லது வீடுகளுக்குச் சமீபமாக வாழ்பவராக இருக்கும் ஒருவர் கொள்ளையில் சம்பந்தப்படக் கூடும் என்ற நிலையும் உண்டு.

ஆகையால் மக்கள் தமது உடைமைகள் சம்பந்தமான உள்விவகாரங்களை வெளியாருடன் கலந்துரையாடுவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். அதன்மூலம் கொள்ளையரைத் தூண்டக்கூடிய விதத்தில் துப்புக்கள் கிடைப்பதைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

அதுமட்டுமன்றி கொக்குவில் நந்தாவில் பகுதி மக்களைப்போல ஒன்றுபட்டுக் கொள்ளையரை விரட்டக்கூடிய மனத் துணிவும் மக்களுக்கு வரவேண்டும்.

ஒருவீட்டிற்குக் கொள்ளையர்கள் வந்தால், அந்தப் பகுதியில் வாழ்பவர்களுக்கு மட்டுமே புரியக்கூடிய சமிக்ஞை மற்றும் குழூஉக்குறிகளைப் பாவித்து அயலவர்கள் எல்லோரையும் அழைக்கக்கூடிய உத்திகளையும் மக்கள் கையாளலாம்.

கொள்ளையர்கள் ஆயுதபாணிகளாக வருகிறார்கள் என்பதால் அவர்களுடன் மோதுவது அல்லது மடக்கிப் பிடிப்பது அல்லது விரட்டுவது கஷ்டம், ஆபத்தானது என்று எண்ணி, தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மக்கள் கவனம் எடுக்காமல் இருந்தால கொள்ளைகளைக் கட்டுப் படுத்த முடியாது.

கொள்ளைகளைத் தடுக்கும் முழுப் பொறுப்பும் இப்போது மக்களையே சார்ந்திருக்கிறது. தன்கையே தனக்குதவி, அடம்பன்கொடியும் திரண்டால் மிடுக்கு என்ற வாக்கியங்களைச் செயற்படுத்துவதை விட வேறு மார்க்கமில்லை.

இதனை உணர்ந்து குடாநாட்டின் ஒவ்வொரு ஒழுங்கையில் வாழ்பவர்களும் கொள்ளைத் தடுப்புக் குழுக்களை நிறுவி, ஒற்றுமையுடனும், மனதுணிவுடனும் செயற்பட வேண்டிய காலம் வந்துவிட்டது.

நேற்று அடுத்தவர் வீட்டில் நடந்தது, இன்று எனது வீட்டில் நடக்கலாம் என்ற உணர்வோடு மக்கள் ஒன்றுபட்டுச் செயற்படுவதே கொள்ளைத் தொல்லையைப் போக்க உதவும்.

# இரண்டு ஜேர்மனிகளையும் இணைப்பது பயங்கர விளைவுகளை ஏற்படுத்தும்!

## மேற்கு ஜேர்மன் அதிபருக்கு சோவியத் தலைவர் எச்சரிக்கை

மாஸ்கோ, அக் 25
நான்கு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு மாஸ்கோ சென்றுள்ள மேற்கு ஜேர்மன் அதிபர் ஹெல்மட் கோலுக்கு கிரெம்ளின் மாளிகையில் சோவியத் ஜனாதிபதி மிக்செய்ல் கோர்ப்பச்சேவ் விருந்தளித்துக் கௌரவித்தார்.

அப்போதுமேற்குஜேர்மன் அதிபர் மேற்கு. கிழக்கு நாடுகளாகப் பிளவுபட்டுள்ள ஜேர்மனிகளை இணைக்கவேண்டும் என்று உருக்கமான வேண்டுகோளை விடுத்தார்,

இந்த வேண்டுகோளை மனித நேயக் கண்ணுடன் பரிசிலனை செய்யும்படி திரு கோல் கேட்டுக் கொண்டார்

★ இரண்டு நாடுகளின் மக்களும் சேர்ந்து வாழவேண்டும் என்ற உணர்வு யதார்த்தபூர்வமானது.

★ இது சரித்திர ரீதியாக ஏற்றுக்கொள்ளப் படவேண்டியதாகும்.

★ இணைப்பு விஷயத்தில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது

★ அமைதியான வழிகளில் இதற்கு தீர்வு காணமுடியும்.

★ கிரெம்ளினில் ஏற்பட்டு வரும் மாற்றங்களின் மத்தியில் இரண்டு ஜேர்மனிகளை இணைக்கும் விஷயம் சாதகமாக ஆராயப்படவேண்டும்.

இவ்வாறு மேற்குஜேர்மனி அதிபர் கோல் தெரிவித்தார்.

பதிலளித்துப் பேசிய சோவியத் ஜனாதிபதி மிக்செய்ல் கோர்பச்சேவ் இணைப்பு ஆபத்தானது என்று எச்சரித்தார்.

"ஜேர்மனி மேற்கு' கிழக்கு என்று தற்போது பிரிக்கப்பட்டுள்ளது. இதைப் பற்றிப் பேசுவதோ, இணைப்பு பற்றி ஆராய்வதோ குழப்பத்தை ஏற்படுத்தும்.

அது மட்டுமல்ல இரண்டு நாடுகளையும் இணைப்பது நினைத்துப் பார்க்க முடியாத. பயங்கர விளைவுகளை ஏற்படுத்தும் "—

இப்படி திரு.கோர்ப்பச்சேவ் எச்சரித்தார். (எ)

# 'ஹப்பி பேர்த் டே ரு யூ' பாடல் விற்பனைக்கு வந்துள்ளது

வாஷிங்டன். அக் 25
Happy Birthday to You" ஹப்பி பேர்த் டே ரு யூ) என்ற ஆங்கிலப்பாடல் விற்பனைக்கு வந்துள்ளது.

உலகெங்கும் எல்லோராலும் பிறந்த தின வாழ்த்தாகப் பாடப்படும் இப்பாடலின் "கொப்பிரைட்" உரிமை பேர்ச்ட்ரீ விமிடெட்டுக்கு உரியது.

இந்தக் கம்பெனி இப்பாடலில் கொப்பிரைட் உரிமையை 1935 இல் பெற்றது. இப்போது அந்த உரிமையைவிற்கப் போவதாக இக்கம்பெனி அறிவித்து இருககிறது. 120 லடசம் டொலருக்கு பாடலின் உரிமை விற்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பாடல் அந்த நிறுவனத்துக்கு ஆண்டு தோறும் 10 லட்சம் டொலர் வருமானத்தைக் கொடுத்து வருகிறது.

ஞாயிறு பாடசாலை ஒன்றின் இரண்டு ஆசிரியர்கள், பட்டி ஹில் (Patty Hill ) மில்ட்ரெட் ஹில (Mildred Hill) ஆகிய சகோதரிகள் இப்பாடலை இயற்றியவர்கள். அமெரிக்காவில் கென்டகி லூசிவிலேயைச் சேர்ந்தவர்கள் இவர்கள்.

அவர்கள் வெளியிட்ட 'ஞாயிறு பாடசாலைக்கான பாடல் கதைகள்' (Song stories for the Sunday school) என்ற நூலில் இப்பாடல் பிரசுரமானது

இப்பாடலின் முதல் ஆரம்ப வாக்கியங்கள் வருமாறு;

'Good morning to you, good morning to you, good morning dear children, good morning to you" ஆகும். இதனை இயற்றிய சகோதரிகள் "Happy birthday to you" என்ற வாக்கியத்தைப் பின்னர் சேர்த்தார்கள்.

இப்பாடலின் "கொப்பிரைட்" உரிமை 2010 ஆவது ஆண்டில் காலாவதியாகிறது. அதன் பின்னர் இப்பாடல் பொதுச் சொத்தாகிறது. (எ)

# பிலிப்பீன்ஸில் சூறவளி 50 பேர் பலி!

மணிலா, அக் 25
பிலிப்பீன்ஸ்ஸை சூறாவளி நேற்று மணித்தியாலத்துக்கு நூறு மைல் வேகத்தில் தாக்கியது

சுமார் 50 பேர் உயிரிழந்தனர். 400 பயணிகளுடன் சென்று கொண்டிருந்த கப்பல் ஒன்றைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டது

மணிலா நகர் கடந்த இரவு முழுவதும் இருளில் மூழ்கி இருந்தது. மின்தொடர்பு துண்டிக்கப்பட்டதே இதற்குக் காரணம் (எ)

# பஞ்சாப்பில் 12 பேர் பலி!

சண்டிகார் அக் 25
பஞ்சாப் மாநிலத்தில் ஜாலந்தர் நகர் அருகில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 12 பேர் உயிரிழந்தனர். மற்றும் பலர்காயமடைந்தனர்.

இந்துமத வழிபாடு ஒன்றில் கலந்து கொண்டவர்மீது தீவிரவாதிகள் சரமாரியாகச் சுட்டனர் என்று அறிவிக்கப் பட்டது (எ)

# ராமராவ் "ஸ்டைலை" பின்பற்றும் ஜெயலலிதா- ஹண்டே பேட்டி

சடலூர், அக் 25
"தமிழகத்தில் ஆட்சியைக் கைப்பற்ற என். டி. ராமராவ் ஸ்டைலை ஜெயலலிதா பின்பற்றுகிறார்" என்று அ தி மு.க. (ஜெ) துணைப் பொதுச் செயலாளரும், மாஜி அமைச்சருமான ஹண்டே கூறினார்.

கடலூரில் ஹண்டே நிருபர்களை சந்தித்த போது அவர் கூறியதாவது, தேர்தலை உடனே நடத்த வேண்டும். கவர்ணர் ஆட்சி நீடிப்பது முறையற்றது. அலெக்சாண்டர் மிக திறமையாக செயல்படுகிறார்; மக்களுக்கு நன்மை கிடைக்கிறது. என்று ஒரு சிலர் பேசுகின்றனர் இது ஏற்கமுடியாத கருத்து.

ஜனநாயக வழிமுறைகளை பின்பற்றவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு பிரதமர் ராஜீவ் பலியாகக்கூடாது. தேர்தலை விரைவில் நடத்த வேண்டும். கவர்ணர் ஆட்சி நீடிக்கக் கூடாது.

ஜெயலலிதாவுக்கு கிராம மக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது. மக்களிடம் எழுச்சி தோன்றியுள்ளது.

ஆந்திர முதல்வர் என்.டி. ராமராவ் 1981-82இல் இது போல்தான் கிராமம் கிராமமாக சென்றார். மக்களிடையே வரவேற்பை பெற்றார். ஆட்சியை கைப்பற்றினார். இது போலத்தான் ஜெயலலிதா இப்போது பிரசாரம் செய்து வருகின்றார். ஆட்சியை கைப்பற்றி விடுவார்.

கிராம மக்களிடையே ஏற்பட்டுள்ள எழுச்சி ஜெயலலிதாவின் செல்வாக்கை எடுத்துக்காட்டுகிறது 'நால்வர்குடி' தி. மு கவுக்கு எதிரிகள் என்று கூறி வருகின்றனர். இது ஒரு அரசியல் டிராமா.

இவ்வாறு ஹண்டே கூறினார். (எ-4)

## அமெரிக்காவிலும் வீடற்றவர் ஆர்ப்பாட்டம்

வாஷிங்டன், அக. 25
ஜனாதிபதி தேர்தலில் உபஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும் குடியரசுக் கட்சி வேட்பாளர் திரு. டான் குயெலின் அலுவலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்த 19 பேரை பொலீஸார் கைது செய்தனர்.

வீடற்றவருக்கு வீடு வழங்க வேண்டும் என்று கோரி இவர்கள் ஆர்ப்பாட்டஞ் செய்தனர் என்று தெரிவிக்கப் படுகிறது (எ)

# சைவ நெறிமுறைகளைக் கட்டிக்காப்பது ஒவ்வொரு சைவனதும் கடமை

## கோகுலாலயத் திறப்பு விழாவில் சாவகச்சேரி நீதிவான் உரை

கொடிகாமம் அக் 26
ஒவ்வொரு சமயமும் தனக்கென சில விதி முறைகள், கட்டுப்பாடுகள், ஒழுக்க நெறிமுறைகள் எனத் தத்தமது சமய மரபுகளைப் பேணி வந்துள்ளன. ஆனால் சைவ சமயத்தைப் பொறுத்தவரை எவரால் எப்போது எப்படி ஆரம்பமானது என்பது எவருக்குமே தெரியாத நிலை. இதன் நெறிமுறைகளை, ஆசாரக் கோட்பாடுகளை பரம்பரை பரம்பரையாக கட்டிக் காத்து பேணிவளர்ப்பது ஒவ்வொரு சைவனதும் தலையாய கடமை.

மண்டுவில் திருவெள்ளாறை இலஞ்சிராணிய(ம்) குமரகோட்டத்தில் ஆரம்பமான கோகுலாலயத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சாவகச்சேரி நீதிவான் புலவர் செஞ்சொற் கொண்டல் திரு. மு. திருநாவுக்கரசு மேற் கண்டவாறு கூறினார்.

ஆலயத்திற்குரித்தாகிய பசுக் கூட்டங்கள் சங்கற்பம் செய்யப்பட்டு சிவாச்சாரியர்கள், அந்தணர் புடைசூழ கோகுல ஆலயப் பிரவேசம் செய்தபின் குமரகோட்டம் ஸ்ரீ முருகன் கோயிலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அடியார்கள் மத்தியில் நீதிபதி உரையாற்றினார்.

சைவ சித்தாந்த பண்டிதர் சிவாகம கிரியாரத்தினம் சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமை வகித்தார்.

திரு. திருநாவுக்கரசு தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

கடந்த நூற்றாண்டு காலத்தை ஆராய்ந்தால் இந்துக்கள் பசுவைக் கொன்று உண்ணும் பழக்கம் வருடா வருடம் அதிகரித்து அதுவும் ஒரு நாகரிகமாக மாறுவதைக் காண்கின்றோம்

'ஆவுரித்துத் தின்னும் புலையரேனும்' என்று பாடிய காலம் போய் இன்று 'ஆ' உரித்துத் தின்பவர்கள் கொகை அதிகரித்து நிற்பது சைவ உலகம் வேதனையோடு விசனிக்க வேண்டியதொன்றாகும்

பசுவே தெய்வம். பசுவின் பாலே இவ்வுலக அமிர்தம். கோசலம் கோமயமே பஞ்சகவ்வியத்தின் ஓர் அங்கம். இப்படி இருக்க தேவர்கள் தேவதைகள் தங்கி நிற்கும் 'ஆவை' வதைப்பது பஞ்சமா பாதகமாகும்.

மனிதன் தானுண்டு தனக்குதவாது என வீசும் வைக்கோல், அரிசி நீங்கிய தவிடு, பால் புளிந்த பூ, எண்ணை தந்த சக்கைப்பிண்ணாக்கு என்பன உண்டு சுத்தமான பாலைத் தரும் பசு 'கோமாதா' ஆவதை சைவர்கள் மறந்து விடக் கூடாது.

தெய்வ அம்சம்பல நிறைந்த தெய்வத்தாயை பேணி வளர்க்க கோவாலயம் அமைத்தமை சைவத்திற்காற்றும் பெருந் தொண்டாகும்.

இப்படி திரு திருநாவுக்கரசு சொன்னார்.

சொற்பொழிவின் இறுதியில் தேவஸ்தான ஆசான குருசிவஸ்ரீ ஜெகதீஸ்வரக் குருக்கள் நீதிபதியை 'செஞ்சொற் கொண்டல் எனும் பட்டம் சூட்டி கௌரவித்து படச் சுவைபடப் பேசும் நல்லேலான் என்று வியந்து புகழாரம் சூட்டினார்.

சாவகச்சேரி நகரசபை ஆணையாளர் திரு த. நவரத்தினராசா பேசும்போது என்றும் எதிர்பாராத ஒரு தெய்வ நிகழ்ச்சியை எடுத்தாண்டமை சைவத்துக்கும் பசுக் குலத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை பொதுமக்களுக்கு தெரியவைத்த புனிதமான நிகழ்ச்சி

பசு பசுமை நிறைந்தது பசுவை வளர்ப்போரிடம் தெய்வீகமான பசுமைப் பண்புகள் மலரும். இவற்றைக் காணும் சிறுவர்களிடமும் தூய குணங்கள் பிரவாகித்து தெய்வீகம் வளர வழி பிறக்கும். இப்படியான நல்ல நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் வழங்கவேண்டும் ஆலயங்களில் மட்டுமன்றி வீடுகள் தோறும் கோகுலாலயம் வளர வேண்டும்'

இப்படிக் கூறினார்.

சந்தர்ப்பம் சூழ்நிலையைப் பொறுத்து. சமுகமளிக்க முடியாதிருந்த நல்லை ஆதீன மகா சன்னிதான முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் அனுப்பிய ஆசிச் செய்தி வாசிக்கப்பட்டது.

ஆசிரியர் திரு க. சங்கரப்பிள்ளை சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் சிவஸ்ரீ கி சோமசுந்தரக் குருக்கள் சிவத்திரு. க சிவானந்தக் குருக்கள் சிவஸ்ரீ நா சர்வேஸ்ரக் குருக்கள் கவிஞர் வே. குமாரசாமி உட்பட பலர் உரை நிகழ்த்தினர் [illegible]

கோகுலாலயத்தில் லட்சுமி, துளசி, சுரபி. செய்வி, வள்ளி எனும் நாமம் சூட்டப்பட்ட ஐந்து பசுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

இளைப்பாறிய தபாலதிபர் திரு. பொன் சரவணமுத்து முடிவுரை நிகழ்த்தினர். (இ-75)

# சுன்னாகப் பகுதியில் மாடுகளுக்குத் தடுப்பூசி

மானிப்பாய், அக். 26
மாடுகளுக்கு கால் நோய், வாய்நோய் தடுப்பு ஊசி ஏற்றும் பணி இன்று 26 ஆம் திகதி சுன்னாகம் கால் நடை வளர்ப்போர் சங்கப் பிரிவுக்குட்பட்ட பின்வரும் நிலையங்களில் நடைபெறும்.

★ சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலைக்கு அருகாமையில்

★ கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை.

★ கந்தரோடை சுப்பிரமணியம் வாசிகசாலைக்கு அருகாமையில்.

சுன்னாகம் கால்நடை வளர்ப்போர் சங்க ஆதரவில் நடைபெறும் நோய்த்தடுப்பூசிபோடும் பணியில தெல்லிப்பளை கால்நடை வைத்தியர் திருமதி சுமணதேவி தனபாலசிங்கமும் அவரது குழுவினரும் பங்கேற்று நடத்துவர். (இ-90)

# ஏழு கட்சிகள் எதிரணி ஜே. ஆருடன் மீண்டும் நாளை சந்தித்துப் பேச்சு

கொழும்பு, அக். 26
ஏழு எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதி ஜெயவர்த்தனவை மீண்டும் நாளை வியாழக் கிழமை சந்தித்துப் பேச விருக்கின்றனர்.

இவர்களின் முதல் சந்திப்பு கடந்த வாரம் இடம்பெற்றது.

அப்போது ஏழு எதிர்க்கட்சிகளும் முன்வைத்த கோரிக்கைகள் பற்றிய அரசின் நிலைப்பாட்டை அடுத்த சந்திப்பின் போது தெரிவிப்பதாக ஜனாதிபதி ஜெயவர்த்தன உறுதியளித்திருந்தார்.

இப்போது இரண்டாவது சந்திப்புக்கு திகதி குறிக்கப்பட்டிருக்கிறது

★ காவலில் உள்ள அரசியல் கைதிகள், மாணவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

★ நாட்டில் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும்

★ வடக்கு-கிழககில் அமைதிப்படையின் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும்

★ வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட வேண்டும்.

★ ஜனாதிபதித் தேர்தலுடன் நாடாளுமன்றத் தேர்தலும் நடத்தப்பட வேண்டும்.

இக்கோரிககைகளையே முதற் சந்திப்பின்போது ஏழு எதிர்க்கட்சிகளும் முன்வைத்தன.

### வரவேற்பு

இதேவேளை — நாடாளுமன்றத் தேர்தலையும் ஜனாதிபதித் தேர்தலுடன் நடத்த வேண்டும், இடைக்கால அரசு ஏற்படுத்தப்பட வேண்டும் — என்று நான்கு பௌத்தமத பீடாதிபதிகள் ஜனாதிபதிக்குக் கடித மூலம் விடுத்த வேண்டுகோளை, எதிர்ககட்சிகள் வரவேற்றுள்ளன என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. (ஓ-எ)

### புனருத்தாரண வேலைகள்

நெடுந்தீவு மேற்கு நெமுலினி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய புனருத்தாரண வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

எதிர்வரும் சித்திரைத் திங்களில் மகாகும்பாபிஷேகம் நடைபெறும் என ஆலய நிர்வாகக் குழுவினரில் ஒருவரான திரு நா சங்கரப்பிள்ளை தெரிவித்தார். (இ-111)

### கண்ணீர் அஞ்சலி

படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழம் மக்கள் மன்றத் தலைவர் திரு. க. சிவானந்தசுந்தரத்திற்கு காரைநகர் கோவளம் வாழ் மக்கள் தங்கள் கண்ணீர் அஞ்சலியை அறிக்கை மூலம் தெரிவித்துளளனர். (இ-73)

## நூல் வாங்க நின்ற கியூ!

யாழ்ப்பாணம், அக். 26
நூல ஒன்றை வாங்குவதற்கு அபிமானிகள் 'கியூ'வில் நின்றனர்!

யாழ்ப்பாணத்தில் நடந்த இந்தச் சம்பவம் நூல் வெளியீட்டு விழாவுக்கு வந்திருந்த பார்வையாளர்களை ஆச்சரியத்தில் மூழ்கடித்தது

தட்டுப்பாடான பாவனைப் பொருள் ஒன்றை வாங்குவதற்குக் காத்து நிற்பதுபோல அபிமானிகள் நூற்றுக்கணக்காகக் 'கியூ'வில் நின்று பணம் கொடுத்து நூலை வாங்கினர்,

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் இங்கு நடைபெற்ற 'சச்சி மாஸ்டர்' எழுதிய 'மக்கள் வாழ்வில் பழமொழி' என்ற நூல் வெளியீட்டு விழாவிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது (அ-51)

### ஒத்திவைப்பு

கொடிகாமம் அக 26
திங்கட்கிழமை நடைபெறவிருந்த தென்மராட்சி கிழக்கு (கொடிகாமம்) ப.நோ கூ சங்கப் பொதுச்சபைக் கூட்டம் மற்றொரு தினத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (இ-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

26 - 10 - 1988 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
• தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
• நெகடிவ் [PROCESSING] செய்தல் இலவசம்
• சிறப்பான வர்ண நிழற்படச் சுருள்கள்
KODAK FUJI KONICA
TUDOR FORTE B/W
பெற்றுக் கொள்ள நாடுங்கள

## கார்த்திக் - ராகினி திருமணம்

### ஸ்ரீபிரியா தற்கொலை செய்ய முயற்சி!

சென்னை, அக். 26

நடிகர் கார்த்திக், நடிகை ராகினியை இரகசியத் திருமணம் செய்து கொண்டுவிட்டார். இந்த தகவல் வெளியானது நடிகை ஸ்ரீபிரியா கார்த்திக்குடன் நேரடியாக சண்டைபோட்டு இழுபறிப் பட்டதுடன், மனமுடைந்து விஷமருந்தித் தற்கொலை செய்யவும் முயன்றார்.

தமிழக நாளேடுகள் இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கின்றன அச்செய்திகளில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நடிகர் கார்த்திக், மறைந்த பிரபல நடிகர் முத்துராமனின் மகன் 'ஆலைகள் ஓய்வதில்லை' படத்தின் மூலம் அறிமுகமானவர்.

நடிகை ராகினி 'சோலைக்குயில்' படத்தில் மூலம் அறிமுகமானவர். பி. ஏ. பட்டதாரியும் கூட.

இருவரும் கடந்த ஆகஸ்ட் 19 ஆம் திகதி கோத்தகிரி மாரியம்மன் கோயிலில் ரகசியமாகத் திருமணஞ் செய்து கொண்டனர்.

சரியாக இரண்டு மாதங்கள் கழித்து கடந்த 15ஆம் திகதி நடிகர் கார்த்திக்கும் நடிகை ராகினியும் தங்கள் ரகசியத் திருமணத்தை பகிரங்கமாக்கினர்.

இதற்குமுதல் நாள் சோலைக்குயில் பட்டப்பிடிப்பு நடந்தது.

நடிகர் கார்த்திக் அதில் கலந்து கொண்டார். மதியவேளை திடீரென்று அங்கு சென்ற நடிகை ஸ்ரீபிரியா, மாடியில் இருந்த கார்த்திக்கிடம்போனர்.

''என்னை ஏமாற்றி விட்டாயே'' என்று ஸ்ரீபிரியா கார்த்திக்கை ஏசினர்.

அப்போது கார்த்திக் ''உனக்கு 36 வயது ஆகிறது. எனக்கு 29 வயது தான் உன்னை எப்படி நான் திருமணம் செய்ய முடியும்?'' என்று கேட்டார்.

இதனால் ஆத்திரமடைந்த ஸ்ரீபிரியா கார்த்திக்கின் கையை பிடித்து முறுக்கி கழுத்தை நெரிக்க முயன்றார்.

இந்த இழுபறியில் சிறிது நேரத்தில் ஸ்ரீபிரியா மயங்கி விழுந்தார். வாயில் நுரைதள்ளியது. உடனடியாக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

உணவில் விஷம்கலந்து சாப்பிட்டுவிட்டே ஸ்ரீபிரியா நடிகர் கார்த்திக்குடன் சண்டை இட்டாராம் என்ற தகவல் பின்னர் வெளியானது.

விஷமுறிவு மருந்து கொடுக்கப்பட்ட பின்னர் ஸ்ரீபிரியாவின் உடல் நிலை தேறியது.

நினைவு திரும்பிய பின்னர் ஸ்ரீபிரியா, ''என் வாழ்க்கையில் ஏற்பட்ட கெட்ட கனவாக இந்த சம்பவம் நடந்து விட்டது. ஓய்வுக்காகவும் மன அமைதிக்காகவும் 10 நாட்கள் வெளிநாடு செல்ல உள்ளேன். அதன் பின்னர் சினிமாவில் தொடர்ந்து நடிப்பேன்''— என்று தெரிவித்தார்

இதனிடையில் ஸ்ரீபிரியாவை கார்த்திக் ஏமாற்றிவிட்டார் என்று ஸ்ரீபிரியாவின் அக்கா வைஜயந்தி பொலீஸில் புகார் செய்திருக்கிறார்.

இச்சம்பவம் பற்றி நடிகர் கார்த்திக் சொன்னதாவது:

நடிக்கும் நடிகைகளுடன் கலகலப்பாக பழகுவேன். ஸ்ரீபிரியாவுடன் நண்பராகப்பழகினேனே ஒழிய காதலிக்கவில்லை. அவர் காதலிப்பார் என்றும் எதிர்பார்க்கவில்லை.

என்னுடன் வாக்குவாதப்பட்டதும் ஸ்ரீபிரியா மயங்கி விழுந்தார். நான் சபரிமலைக்கு மாலைபோட்டு இருந்ததால் நான் ஸ்ரீபிரியாவைத் தொடவில்லை.

நடிகை ராகினிக்கும் எனக்கும் திருமண வரவேற்பு டிசம்பரில் இடம் பெறும்— இப்படி கார்த்திக் சொன்னர்.

(உ-எ)

## வாகன விபத்தில் மரணம்

யாழ்ப்பாணம், அக். 26

காங்கேசன்துறைப்பகுதியில் இடம் பெற்ற வாகன விபத்து ஒன்றில் 57 வயதான ஒருவர் மரணமானார்.

காங்கேசன்துறை சந்தியில் நடந்த இந்த விபத்தில் அமைதிப்படை வாகனம் ஒன்றே சம்பந்தப்பட்டிருந்தது.

விபத்தில் காயமடைந்தவர் தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டபின் யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார், அங்கு அவர் மரணமானர்.

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த கந்தையா சோமசுந்தரம் வயது 57 என்பவரே உயிரிழந்தவர் என தெரிவிக்கப்படுகிறது. (உ-9)

CITY & GUILDS OF LONDON
INSTITUTE EXAMINATION
(Telecommunication Technician)
MAY / JUNE 1989
வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன
சேர விரும்புவோர் பின்வரும் இடத்தில் தொடர்பு கொள்ளவும்.
AUTO COOL ENGINEERS BUILDING
(Opposite Becon Institute)
STANLEY ROAD
தொடர்புகொள்ளும் நேரம்:
Saturday: 8.00 a.m. — 12-30 p.m.
Sunday : 9 00 a.m. — 1-30 p.m.
(7447)

எமது நேற்றைய புதிய வெளியீடு
(1) பாண்டியராஜன் - அபிநயா
பாண்டியன்- செந்தில்-
S.S. சந்திரன்
"ஜாடிக்கேத்த மூடி"
DELTA FORCE
COMMANDO
WAR FILM
குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C/417)

நாடு திரும்பிய அகதிகள்

## நிவாரணப் படிவங்களை நவ. 1ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்க வேண்டும்

யாழ்ப்பாணம் அக் 26

இந்தியாவில் இருந்து கப்பல் மூலம் காங்கேசன் துறையில் வந்திறங்கிய அகதிக்குடும்பங்களில், வீடுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கும், மீன்பிடித் தொழில் இழந்தவர்களுக்கும் வழங்கப்பட்ட நிவாரணப்படிவங்களைப் பூர்த்தி செய்து நவம்பர் மாதம் முதலாம்திகதிக்கு முன்பதாகக் கையளிக்குமாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரஸ்தாப விண்ணப்பப்படிவங்கள் யாழ் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினாலும் யாழ். பிரிவு மீன்பிடி விரிவாக்க அலுவலகத்தினராலும் வழங்கப்பட்டன.

வீடு பாதிக்கப்பட்டவர்கள் முன்றும் குறுக்குத் தெருவில் உள்ள வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிலும் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டவர்கள் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள மீன்பிடிவிரிவாக்க உத்தியோகஸ்தர் பணிமனையிலும் தமது விண்ணப்பங்களை கையளிக்க வேண்டும்.

மேற்படி நிவாரணப் படிவங்களை இதுவரை பெருதவர்கள் அவற்றை உடனடியாக மேற்குறிப்பிட்ட முகவரிகளில் பெற்று பூர்த்தி செய்து குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் கையளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது (அ-5)

## குடும்பநல சேவையாளர் நேர்முகப்பரீட்சை இவ்வாரத்தில்

யாழ்ப்பாணம் அக்டோபர் 26

குடும்பநல சேவையாளர்கள் பதவிக்காக தமது பகுதி மருத்துவ சுகாதார அதிகாரிகளுடாக விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இந்தவாரம் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை, கோப்பாய் ஆகிய தேர்தல் தொகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு 27ஆம் திகதி வியாழக்கிழமையும்—

சாவகச்சேரி, உடுவில், உடுப்பிட்டி. பருத்தித்துறை ஆகிய தேர்தல் தொகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு 28ஆம் திகதி வெள்ளிக்கிழமையும—

கிளிநொச்சி, ஊர்காவற்துறை, நல்லூர் ஆகிய தேர்தல் தொகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு 29ஆம் திகதி சனிக்கிழமையும் நேர்முகப்பரீட்சை நடைபெறும்.

நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற வருபவர்கள் தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்விச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பதவியுடன் தொடர்புடைய வேறுசான்றிதழ்கள் என்பவற்றுடன் குறித்த திகதிகளில் காலை 8மணியளவில் யாழ். பிராந்தியச் சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்தில் சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். (உ—5)

## ஐரோப்பிய நாடுகளில் அன்ரன் பாலசிங்கம்

பாரிஸ், அக் 26

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு ஆதரவுதிரட்டுவதற்காக அந்த இயக்கத்தின் முக்கியஸ்தர்களில் ஒருவரான திரு. அன்ரன் பாலசிங்கம் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்துவருகிருர்.

இதன் ஒரு கட்டமாக அவர் பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் பல்வேறு அரசியல் பிரமுகர்களையும் சந்தித்துப்பேசினர். சர்வதேச தகவல் தொடர்பு ஸ்தாபனங்களின்பிரதிநிதியும் அவர் சந்தித்து அவர்களுக்கு விசேட பேட்டிகளை வழங்கினர்.

தமிழ் ஈழப் பகுதியில் நிலவும் சூழ்நிலை மாகாணசபைத் தேர்தலுக்கான ஏற்பாடு ஆகியவை குறித்தும் அவை தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு குறித்தும் அவர் விளக்கமளித்தார்.

கனடா, ஆஸ்திரேலியா ஆகியநாடுகளிலும் இங்கிலாந்து உட்படபல ஐரோப்பியநாடுகளிலும் அவர் சுற்றுப்பயணம் மேற்கொள்வர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மீனவர்கள் தகராறு; சமரசத்திற்கு முயற்சி

குருநகர், அக். 26

பூநகரி-கல்முனைப் பகுதியில் இரு மீனவர் குழுக்களிடையே ஏற்பட்ட தகராறை சுமுகமாக தீர்ப்பதற்கு இரு பகுதியிலும் உள்ள முக்கியஸ்தர்கள் முயன்று வருகின்றனர்.

கடற்றொழிலாளர்கள் இரு பிரிவினர் மத்தியில் ஏற்பட்டுள்ள தகராறு காரணமாக இரு பகுதியினரும் மோதிக்கொண்டதாகத் தெரிவிக்கபபடுகிறது.

பூநகரி—கல்முனையை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட மீனவர்கள், வேறிடங்களில் இருந்து அங்கு சென்று அப்பகுதிக் கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வரும் மீனவர்களைத் தடுத்து வருவதாகவும் இதனால் நேற்றும் நேற்று முன்தினமும் மோதல்கள் ஏற்பட்டதாகவும் அறிய வருகிறது (உ-51)

### தென்மராட்சி....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அன்றைய தினம் தென்மராட்சி மக்கள் அனைவரும் தமது வாகனங்களிலும் மற்றும் வர்த்தக நிலையங்கள், பொது நிறுவனங்கள், அரச மற்றும் காரியாலயங்கள் ஆகியவை தோறும் கறுப்புக்கொடிகளைப் பறக்க விட்டும்—

அவற்றை, இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நேரமான நண்பகல் 12 மணியுடன் மூடியும் துக்கம் அனுஷ்டிக்குமாறு வேண்டுகிறோம்— இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது (உ)

### நகரில்..

முந்தார்.

சூட்டுக்காயங்களுக்கு இலக்கான இந்த இளைஞரை உடனடியாக இந்திய அமைதிப்படையினர் யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். ஆயினும் அங்கு அவர் மரணமானர்.

இறந்தவர் சங்கானையைச் சேர்ந்த க.ராஜேஸ்வரன் (வயது 22) என அடையாளம் காணப்பட்டது (உ-9)

ஜனவரிக்குள் தேர்தல் நிச்சயம்:

## தமிழ்நாட்டுத் தலைவர்கள் போட்டியிடும் தொகுதிகள்

சென்னை அக் 26

தமிழக சட்டமன்றத் தேர்தல்கள் எதிர்வரும் ஜனவரிமாத முடிவுக்குள் நடைபெறுவது ஓரளவு உறுதியாகி விட்டது.

தற்போது கட்சித்தலைவர்கள் எங்கெங்கு போட்டியிடப் போகின்றர்கள் என்பது குறித்து செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

★ஜானகிஅம்மையார் —அநேகமாகத் தனது கணவரின் தொகுதியில் —ஆண்டிப்பட்டியில் தான் போட்டியிடுவார்.

★அண்ணபிறந்த பூமிக்கே — காஞ்சிபுரத்திலேயே-போட்டியிடலாம் என நாவலர் நெடுஞ்செழியன் நினைக்கிருர்.

★இன்றைய நிலையில், பெரியார் மாவட்டம் தான் தனக்குப் பாதுகாப்பு என ஜெயலலிதா எண்ணுகிருர். விவரம் புரிந்த எந்த அரசியல் வாதியும் நகர் புறத் தொகுதியில் போட்டி இடமாட்டார்கள். ஜெயலலிதாவும் அந்தத் தவறைச் செய்யத் தயாரில்லை. ஆகவே அவர் பெரியார் மாவட்டத்தில் ஈரோட்டை அடுத்த பெருந்துறைத் தொகுதியில் அவர் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப் படுகிறது.

இதே தொகுதியில் ஜெயலலிதாவிற்கும், முத்துச்சாமிக்கும் இடையில் நேரடிமோதல்இடம் பெறலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

★கருப்பையா மூப்பனர் லால்குடியில்அல்லது நத்தம் தொகுதியில் போட்டியிடுவார்.

★தி.மு.க தலைவர்கள் எங்கு போட்டியிடுவார்கள் என்பது தற்போது பரமரகசியமாகவே வைக்கப் பட்டிருக்கிறது. (உ)

### ஊரடங்கு விவரங்கள்...'

(1ஆம் பக்க தொடர்ச்சி)

முதலில் அறிவிக்கப்பட்டது. ஆனல் அது இன்று நண்பகல் 12 மணிவரை நீடிக்கப்பட்டதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

மொனருகலை மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 6 மணியில் இருந்து மாலை 6 மணிவரையும்-

பதுளை மாநகர சபை, பண்டாரவளை நகர சபை, ஹலி-எல உதவி அரச அதிபர் பிரிவு, வெலிமட உதவி அரச அதிபர் பிரிவு ஆகிய பிரதேசங்களில் நேற்று இரவு 10 மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்குச் சட்டம் இன்று மாலை 6 மணி வரையும்-

களுத்துறை நகர சபை, மத்துகம உதவி அரச அதிபர் பிரிவு ஆகிய பகுதிகளில் நேற்று நள்ளிரவு மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று காலை 6 மணிவரையும் அமுலில் இருக்கும். (உ-எ)

### உள்ளூர் ஊரடங்கு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தற்கு நாசகார சக்திகள் முயல்வதாகத் தகவல்கள் கிடைத்ததைத் தொடர்ந்தே இந்த 'உள்ளூர் ஊரடங்கு' கொண்டு வரப்பட்டுள்ளதாக அரசு மேலும் தெரிவித்து உள்ளது

அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்களிடம் வெளியார் செல்வதைத் தடுக்கவே இந்த உள்ளூர் ஊரடங்கு.

அப்படி இந்த 'உள்ளூர் ஊரடங்கு' சட்டத்தை மீறி அலுவலகங்களுக்குச் செல்வோர் பாதுகாப்புப் படையினரால் சுடப்படுவர்.

நேற்று முன்தினம் பிறப்பிக்கப்பட்ட கண்டவுடன் சுடும் உத்தரவு, உள்ளூர் ஊரடங்கின் போதும் அமுல் நடத்தப்படும்.

இப்படி அரசு அறிவித்திருக்கிறது. (உ-எ)

## தபாலக ஊழியர் சுட்டுக் கொலை

கொழும்பு அக் 26

கண்டியில் நேற்று தபால ஊழியர் ஒருவர் உள்ளூர் தயாரிப்புத் துப்பாக்கி ஒன்றினல் சுட்டுக் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது (உ)

## அச்சுவேலியில் ஜவான் பலி!

புதுடில்லி அக் 26

அச்சுவேலியில் நடந்த மோதல் ஒன்றில் இந்திய அமைதிப்படை ஜவான் ஒருவர் கொல்லப்பட்டார். போராளி ஒருவர் படுகாயமடைந்தார்.

இத் தகவல்களை இந்திய வானெலி நேற்று இரவு வெளியிட்டது. (உ-எ)

## ஆசிய கிண்ண போட்டி ஆரமபம்

டக்கா, அக். 26

ஆசிய கிண்ணத்திற்கான கிரிக்கெட் போட்டி இன்று பங்களாதேஷில் ஆரம்பமாகின்றது

இன்று டக்காவில் நடைபெறும் ஆட்டத்தில் இலங்கை அணி பாகிஸ்தான் அணியுடன் மோதும். சிட்டக்கொங் நகரில் நடைபெறும் ஆட்டத்தில் இந்திய, பங்களாதேஷ் அணிகள் மோதுகின்றன. (உ)

### எதிரிகள்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போட்டு ஒரு வாரத்துக்குப் பிறகே எதிரிகளைத் தூக்கில் போடவேண்டும்

எதிரிகள் ஜனதிபதிக்கு கருணைமனு அனுப்ப ஒரு வாரம் அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது

கேஹர்சிங் சார்பில் கருணைமனு ஜனதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளது எதிரி சத்வன்சிங் சார்பில் கருணைமனு எதுவும் ஜனதிபதிக்கு இதுவரை அனுப்பப்படவில்லை, (உ-எ)

180ஆவது நாள்
கண்ணீர் அஞ்சலி



செல்வன்
குமாரசாமி பிரபாகரன் அவர்கள்
தோற்றம்: 01- 08 - 1970
மறைவு 25- 04- 1988

மாதங்கள் ஆறும் ஓர்கணம் போல
மறைந்ததே பிரபு உறைந்தது குருதி
வேதனைக் கடலில் எம்மை வீழ்த்தி
சோதனை தந்து சுகமென்ன கண்டாய்?
பாதங்கள் கண்ணீரால் கழுவிட வைத்து
பாவிகளா யெமையாக்கி என்ன பெற்ருய்?
மாதங்கள் மாறிப்பல வருடங்கள் ஆனலும்
மாருது எம்துயர் மறையாது உன்உருவம்.

உன் ஆத்ம சாந்திக்கு
கண்ணீர் அஞ்சலிகள்!

இன்று இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி வைபவத்தில் கலந்து சிறப்பிக்க வேண்டுகின்ருேம்.

- பெற்ருேர், சகோதரர்
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.
(7457)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 26-10-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Wednesday 26th October 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org